தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-12-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலையில் பயிர்களுக்கு நுண்ணூட்டச் சத்துக்களின் அவசியம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் கடந்த 48 ஆண்டுகளாக இரண்டாம் நிலை மற்றும் நுண்ணூட்டச்சத்துக்கள் பற்றிய ஆராய்ச்சித் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், சர்வதேச மண் வள ஆண்டு – 2015 ஐ முன்னிட்டு “பயிர்களுக்கு நுண்ணூட்டச் சத்துக்களின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு” 21-12-2015 அன்று ஜம்புகண்டி -ஆனைகட்டியில் நடத்தப்பட்டது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக பழங்குடி விவசாயிகளுக்கான திட்டம் கடந்த சில ஆண்டுகளாக இந்திய வேளான் ஆராய்ச்சி கழக நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த விழாவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். வெ.வே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் துறை பேராசிரியர் முனைவர். ப. ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தைப் பற்றிய விளக்க உரை மற்றும் பயிர்களுக்கு நுண்ணூட்டச்சத்து மேலாண்மை பற்றிய கருத்துரையும் வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர், முனைவர். மா. மகேஸ்வரன் அவர்கள் தலைமை உரை ஆற்றி பழங்குடி விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கினார்.

இந்த கருத்தரங்கில் பனப்பள்ளி, கொண்டனூர், கொ.புதூர் மறறும் ஜம்புகண்டி போன்ற கிராமங்களிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பழங்குடி விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். இரண்டாம் நிலை  மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் குறைபாடுகள் அவற்றின் மேலாண்மை பற்றிய கருத்துக்காட்சியும் அமைக்கப்பட்டு விவசாயிகளுக்கு எடுத்துரைக்க்கப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இயற்கை வள மேலாண்மை இயக்குனரகத்தின் தனி அலுவலர் முனைவர். வே.பெ. துரைசாமி, கால்நடை உதவி மருத்துவர் திருமதி. ஜெயந்தி ஆகியோரும் கருத்தரங்கில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

நிகழ்சியின் இறுதியாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மண்ணியல் மற்றும் வேளாண் வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். தீ. ஜெகதீஸ்வரி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்

